


ஒற்றைப் புகுபதிவும் மறைச்சொல்லும் பயன்படுத்தும் 60க்கும் மேற்பட்ட அரசாங்க அமைப்புகளுடன் மின்னிலக்க முறையில் பரிவர்த்தனை செய்ய சிங்பாஸ் வழிகோலுகிறது.

உங்கள் சிங்பாஸ் அடையாளப்பெயரை அல்லது மறைச்சொல்லை நீங்கள் எப்போதாவது மறந்துவிட்டீர்களா? கவலை வேண்டாம்!

சிங்பாஸ் மொபைல் செயலியுடன், உங்கள் கைரேகை, முக அடையாளம் அல்லது 6-இலக்க மறைக்குறியீட்டைப் பயன்படுத்தி இப்போது உங்கள் மத்திய சேமநிதி இருப்புத்தொகையைச் சரிபார்க்கலாம், வீடமைப்பு வளர்ச்சிக் கழக வீட்டுக்கு விண்ணப்பிக்கலாம், மற்றும் பலவும் செய்யலாம். இனிமேல் நீளமான மறைச்சொற்களை உள்ளிடவோ அல்லது டோக்கன் சாதனங்களை எடுத்துச்செல்லவோ தேவையில்லை! எளிதான அடையாள உறுதிப்பாட்டுடன், நீங்கள் வெளிநாட்டில் இருக்கும்போதுகூட, சிங்பாஸ் மொபைலுடன் பாதுகாப்பான அணுகலைப் பெறலாம்.

## சிங்பாஸ் மொபைலை விரைவாகவும் எளிதாகவும் அமைக்கலாம்

செயல் 1




கூகல் பிளே ஸ்டோர் அல்லது ஆப்பிள் ஆப் ஸ்டோரிலிருந்து 'சிங்பாஸ் மொபைல்' செயலியைப் பதிவிறக்கவும். அதனை உருவாக்கியது "அரசாங்கத் தொழில்நுட்ப அமைப்பாக" இருப்பதை உறுதிப்படுத்தவும்.

செயல் 2






உங்கள் சிங்பாஸ் அடையாளப்பெயரையும் மறைச்சொல்லையும் பயன்படுத்தி உங்கள் சிங்பாஸ் கணக்கில் புகுபதிவு செய்யவும்.

செயல் 3






குறுந்தகவல் வழியாக அனுப்பப்பட்ட அல்லது உங்கள் ஒன்கீ பாதுகாப்பு டோக்கன் சாதனத்தால் உருவாக்கப்பட்ட ஒற்றைப் பயன்பாட்டு மறைச்சொல்லை உள்ளிடவும்.

செயல் 4




உங்களது சொந்த 6-இலக்க மறைக்குறையீட்டை உருவாக்கவும். புகுபதிவு செய்வதற்கு இந்த மறைக்குறியீடு, கைரேகை அல்லது முக அடையாளத்தை நீங்கள் தேர்ந்தெடுக்கலாம். கைரேகை அல்லது முக அடையாளத்தை நீங்கள் தேர்ந்தெடுத்தால், உங்கள் கைரேகை அல்லது முகம் அடையாளம் அங்கீகரிக்கப்படாத நிலையில் இந்த 6-இலக்க மறைக்குறியீட்டை நீங்கள் பயன்படுத்தலாம். எனவே அதை நினைவில் கொள்ளுங்கள்!

செயல் 5




உங்கள் கைரேகையைப் பயன்படுத்தி புகுபதிவு செய்ய டச் ஐடி (iOS பயனர்கள்) அல்லது கைரேகை அங்கீகாரத்தை (Android பயனர்கள்) செயற்படுத்தவும். தேர்ந்தெடுக்கப்பட்ட திறன்பேசிகளில், முக அடையாளத்தைப் பயன்படுத்தி புகுபதிவு செய்ய ஃபேஸ் ஐடி-யை செயற்படுத்தவும்.



வாழ்த்துகள்! உங்கள் சிங்பாஸ் மொபைல் செயலி இப்போது பயன்படுத்த தயாராக உள்ளது.

## சிங்பாஸ் மொபைல் செயலியுடன் மின்னிலக்கச் சேவைகளில் வேகமாகப் புகுபதிவு செய்யலாம்

உங்கள் மத்திய சேமநிதிக் கணக்கை அணுக விரும்புகிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். சிங்பாஸ் மொபைல் செயலியில், சிங்பாஸ் புகுபதிவு பக்கத்தில் காட்டப்படும் QR குறியீட்டை ஸ்கேன் செய்யுங்கள் அல்லது தட்டுங்கள். பின்னர் உங்கள் கைரேகை, முக அடையாளம் அல்லது 6-இலக்க மறைக்குறியீட்டைப் பயன்படுத்தி உங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்தியவுடன், நீங்கள் உள்ளே சென்றுவிடுவீர்கள்!

பயன்படுத்துவது எவ்வளவு எளிதானது என்பதைக் காட்டும் காணொளி இது. இங்கே க்ளிக் செய்யவும்.

## வசதியை நீங்களே அனுபவித்துப் பாருங்கள். செயலியை இப்போதே பதிவிறக்கம் செய்யுங்கள்!

சிங்பாஸ் மொபைல் இருக்க, மறைச்சொற்கள் மறந்துவிடாதிருக்க எழுதி வைப்பதும், குறுந்தகவல்வழி ஒற்றைப் பயன்பாட்டு மறைச்சொல்லுக்காகக் காத்திருப்பதும், டோக்கன் சாதனத்தைத் தூக்கிச் செல்வதும் கடந்தகாலமாகிவிட்டது. நூற்றுக்கணக்கான மின்னிலக்கச் சேவைகளை அணுக உங்கள் கைரேகை அல்லது முக அடையாளம் மட்டுமே உங்களுக்குத் தேவை. இன்றே செயலியைப் பதிவிறக்கி செய்து பாருங்கள்!

## சிங்பாஸ் மொபைலை அமைப்பது எப்படி?



### சிங்பாஸ் மொபைலை பதிவிறக்கவும்

அதனை உருவாக்கியது "அரசாங்கத் தொழில்நுட்ப அமைப்பாக" இருப்பதை உறுதிப்படுத்தவும்.



### உங்கள் கணக்கை அமைக்கவும்

செயலியின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றி ஒருமுறை அமைப்பதை நிறைவு செய்யவும்.



### நீங்கள் தயாராகிவிட்டீர்கள்!

உங்கள் கைரேகையை அல்லது 6-இலக்க மறைக்குறியீட்டைப் பயன்படுத்தி புகுபதிவு செய்யவும்.

Download on the App Store | GET IT ON Google Play